கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministr

கல்வி அமைச்சு

தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை - தமிழ்மொழி அலகு

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை - 2024

**General Certificate of Education (Adv. Level) Examination - 2024**

தமிழ் I
**Tamil I**

**72 T I**

*மூன்று மணித்தியாலம்*
***Three hours***

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

- பகுதி I இல் உள்ள **இரு** வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும், எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக**

அ) "..........பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே"

I. இச்செய்யுளின் திணையையும் துறையையும் விளக்குக.
II. இச்செய்யுளில் கூறப்பட்டுள்ள, நல்லாட்சி செய்யும் அரசனிடம் இருக்கவேண்டிய பண்புகளைக் குறிப்பிடுக.
III. இச்செய்யுள் மூலம் விளங்கும் சங்ககாலப் புறத்திணை இலக்கிய மரபினை எடுத்துக்காட்டுக.
(4+4+4 = 12 புள்ளிகள்)

**ஆ)** என்றலுமே அடியின்மிசை நெடிது வீழ்ந்து அழுவானை இவன் யார்? என்று
கன்றுபிரி காராவின் துயர் உடைய கொடிவினவ கழல்கால் மைந்தன்
இன் துணைவன் இராகவனுக்கும் இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்
குன்று அனைய திருநெடுந்தோள் குகன் என்பான் இந்நின்ற குரிசில் என்றான்

I. இச்செய்யுள் பாடப்பட்ட சந்தர்ப்பத்தினை விளக்குக.
II. இச்செய்யுளின் மூலம் யாருடைய துயரம், எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது?
III. பின்வரும் தொடர்கள் யாரைக் குறித்து நிற்கின்றன?
I) மைந்தன் II. கொடி III. மூத்தான் IV. இளையவன் (4+4+4 = 12 புள்ளிகள்)

2. ‘(அ)’ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

**அல்லது**

‘(ஆ)’ பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே - அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே. (பாரதி)

இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ - உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ. (பாரதி)

சந்தமிகுந்திடு சிந்தென வந்தது
சாரலருவிகள் போல் விழுந்தே - தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல். (பாரதி)

தாமரைக் காடிது நித்தலுஞ் செந்தமிழ்த்
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார். (பாரதி)

புத்தப் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை - மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம்பிறக்குது நேரினிலே. (பாரதி)

முல்லை குறுஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப்பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய். (பாரதி)

மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே. (பாரதி)

I. பாரதியின் பெருமைகளைக் கூறுவதற்கு கவிஞர் உருவகத்தைக் கையாண்ட விதம்.
II. பாரதி மீது பிற புலவர்கள் கொண்ட ஈடுபாட்டினைத் தெளிவுபடுத்துக.
III. பாரதியின் பாடல்களின் இசைச் சுவை எத்தகைய ஆற்றல்களைக் கொண்டது?
IV. “மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார்” இவ்வடிகளில் நீர் காணும் சிறப்புக்கள் யாவை?

(4+4+4+4 = 16 புள்ளிகள்)

(ஆ) இலக்கியமென்பது ஒரு கலை. அதன் கருவியான மொழியைப்பற்றிய நுட்பமான ஆராய்ச்சி நம்மிடமுள்ளது. ஆனால் கலையின் பண்பைப் பற்றிய ஆராய்ச்சியை நாம் செய்யவேண்டும். அதை அடிப்படையாகக் கொண்டே இலக்கிய விமரிசனம் தோன்றும். இதைத் தத்துவரீதியான இலக்கிய விமரிசனம் என்று சொல்லலாம். ஆனால் இலக்கியமென்பது வளர்ந்து வரும்போது அதற்கு முன்னிருந்த பழைய இலக்கியத்தோடு தொடர்பில்லாமல் வளருவதில்லை. கம்பன் விருத்தப்பாவைக் கையாண்டானென்றால் அதற்குச் சீவகசிந்தாமணி ஆசிரியன் வழிகாட்டியாக இருந்தானென்பதை மறக்க லாகாது. இந்தவகையிலே நம் நாட்டின் இலக்கியத்தைத் தொடர்ந்து வளர்ந்து வந்த ஒரு சீவனாகக் கருதி, ஒரு காலத்து இலக்கியத்திற்கும் இன்னொரு காலத்து இலக்கியத்திற்குமுள்ள தொடர்பையும், எப்படி அந்த அந்தக் காலத்திற் புதிய வகைகள், புதிய முறைகள் தோன்றின என்பதைப் பற்றியுமாராய்வது இலக்கிய விமர்சனத்தி லொரு பகுதி, இதைச் சரித்திரரீதியான இலக்கிய விமரிசனமென்று கருதலாம். இலக்கியம் ஆகாயத்தில் முளைப்பதன்று, ஒரு சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவனுடைய அனுபவமே இலக்கியமாகிறது. ஆகவே அவன் எந்த சமுதாயத்தில் வாழ்ந்தான்? அவனுக்கும் மற்றவர்களுக்குமிருந்த உறவென்ன? அவனுடைய வாழ்க்கைச் சரிதம் அவனுடைய இயல்பைப்பற்றி என்ன தெரிவிக்கிறது என்பதெல்லாம் ஆராய்ந்து அவனுடைய இலக்கியத்தின் தன்மையை உணர இந்த அறிவைப் பயன்படுத்தி கொள்வதும் இலக்கிய விமரிசனத்தில் ஒரு முறை. இதை வாழ்க்கைச்சரித ரீதியிலமைந்த இலக்கிய விமரிசனமென்று கொள்ளலாம். இவை தவிர, ஒரு புலவனுக்கும் இன்னொரு புலவனுக்கும் இலக்கியப்பண்பைப் பொறுத்தமட்டில் என்ன என்ன ஒற்றுமை, என்ன என்ன வேறுபாடுள்ளது; இளங்கோவடிகள் குரலுக்கும் கம்பன் குரலுக்குமுள்ள வேற்றுமையென்ன; என்று தனிப் புலவர்களுடைய பண்பை ஆராய்வதும் இலக்கிய விமரிசனத்தின் வேலை. இதை ஒப்புமைரீதியான இலக்கிய விமரிசனமென்று சொல்லலாம். இவ் விமரிசன வகைகள் ஒவ்வொன்றிற்கும் தனி முறைகள் உண்டு; அடிப்படையான விதிகளுமுண்டு.

ஆனால், இலக்கிய விமரிசனம் எந்த வகையானதாக இருந்த போதிலும் ஒரே நோக்கத்தைக் கொண்டுதான் வழங்க வேண்டும். இலக்கியத்தின் பெருமையை உணருவதற்கும் அனுபவிப்பதற்கும் விமரிசனம் வழிகாட்டல் வேண்டும். விமரிசகன் இலக்கணத் தராசைக் கையிலேந்தி இலக்கியத்தை நிறுக்கும் நக்கீரனல்லன். இலக்கியத்திற்கு ஓயாமற் பொருள் விளக்கமும் இலக்கணக் குறிப்புந் தரும் உரையாசிரியனல்லன். “ஓகோ..“ என்று களித்து, “சீ,சீ...“ என்று ஒதுக்குங் குழந்தையுமல்லன். பிரபஞ்சத்தைக் கண்டு தன் மனத்திலெழுமனுபவத்தைச் சொல்லில் தேக்குவது இலக்கியமானால், அந்த இலக்கியத்திலுள்ள அனுபவத்தைத் தெளிவாக்கி அது எவ்வாறு சொல்லிலே தேங்குகிறதென்பதைக்காட்டி, இந்த அனுபவம் சொல்லிலே தேங்கும்போது ஏன் எவ்வாறு கலையாகிறது என்பதைத் தத்துவ ரீதியில் ஆராய்ந்து, கலானுபவத்தின் எல்லை நிலமான ஆனந்தத்திற்கழைத்துச் செல்வதே இலக்கிய விமரிசனமாகும். இதனால் மொழி வளரும்; இலக்கியம் வளரும்; தத்துவ விலாசமேற்படும்; கலானுபவஞ் சித்திக்கும்; சஹ்ருதயம் அதாவது கலைஞனோடொன்றி நின்று அவன் பெற்ற ஆனந்தத்தைப் பெறும் அபூர்வசக்தி, தானாகவே நம்மை வந்தடையும்.

I. ‘இலக்கியம்’, ‘இலக்கிய விமரிசனம்’ என்பன பற்றிய கட்டுரையாசிரியரின் கருத்தினைக் குறிப்பிடுக.
II. ஒரு கால இலக்கியத்திற்கும் அதனை அடுத்து வரும் கால இலக்கியத்துக்குமான தொடர்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?.
III. இலக்கிய விமரிசனத்தின் வகைகளைக் குறிப்பிடுக
IV. இலக்கிய விமரிசனத்தினால் அடையக்கூடிய அனுகூலங்களை முன்வைக்குக.

(4+4+4+4 = 16 புள்ளிகள்)

## பகுதி II

3. திருக்குறள், 'குற்றங்கடிதல்' என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   அ) குற்றங்களாவன எவை?
   ஆ) பொதுவகையால் குற்றங்கடியும் வழிகள்.
   இ) சிறப்பு வகையால் குற்றங்கடியும் வழிகள்.
   ஈ) இவ்வதிகாரத்தில் பயின்றுவரும் அணியின் பொருத்தப்பாடு (4+8+6+2 = 20 புள்ளிகள்)

4. கம்பராமாயணம், குகப்படலத்தில் குகனது கட்டளையை ஏற்று நாவாய்கள் வருதல் முதல் பரதன் படகில் ஏறுதல் வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   அ) நாவாய்களின் தோற்றப்பொலிவு
   ஆ) யானைகள் கங்கையைக் கடந்த விதம்
   இ) மகளிரது தோற்றப்பொலிவு
   ஈ) இப்பகுதியில் கையாளப்பட்டுள்ள உவமை மற்றும் தற்குறிப்பேற்ற அணிகளின் பொருத்தப்பாடு.
   (5+5+5+5 = 20 புள்ளிகள்)

5. வ. ராமசாமி அய்யங்கரின் 'சம்பாஷணை ஒரு கலை' என்ற கட்டுரையின் அடிப்படையில் பின்வருவனற்றை விளக்குக.
   அ) சம்பாஷணை ஒன்றில் இடம்பெற வேண்டிய அம்சங்கள்
   ஆ) காந்தி, 'சம்பாஷணைக் கலையில் வல்லவர்' என்பது எடுத்துக் காட்டப்படும் விதம்.
   இ) கட்டுரையாசிரியர் தனது கருத்துக்களை விளக்க கையாண்ட உத்திகள் (7+7+6 = 20 புள்ளிகள்)

6. எஸ்.பொ. வின் 'தேர்' சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   அ) ஆறுமுகத்தாரின் குணவியல்புகள்
   ஆ) யாழ்ப்பாணத்து பண்பாட்டம்சங்கள்
   இ) குமாரசாமியின் திருமணத்தால் ஆறுமுகத்தார் எதிர்கொண்ட இடர்பாடுகள் (7+7+6 = 20 புள்ளிகள்)

7. இ. முருகையனின் 'இரு துயரங்கள்' எனும் நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.
   அ) இந்நாடகத்தின் மையக்கருத்து
   ஆ) கந்தப்புவின் கோபம் வெளிப்படும் விதம்
   இ) நாடகத்தின் எடுத்துரைப்பு முறை (4+8+8 = 20 புள்ளிகள்)

8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.
   அ) சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில், கோவலனுக்கு கவுந்தியடிகள் கூறிய அற உபதேசங்கள்
   ஆ) அமலனாதிபிரான் பதிகத்தில் கூறப்படும் புராண, இதிகாசச் செய்திகள்.
   இ) தேம்பாவணி காட்சிப் படலத்தில் சாந்தியின் ஐய வினாக்களும் மரியாளின் பதில்களும்
   ஈ) காரணமாலையில் பெருமானாரின் புகழும் ஆன்மீகக் கருத்துகளும்
   உ) 'ஒரு வெண் மணற்கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது' எனும் நாவலில் பின்தங்கிய கிராமங்களின் முன்னேற்றத்திற்கான பாதையாக கல்வி அமையுமாற்றைத் தெளிவுபடுத்துக.
   (10+10 = 20 புள்ளிகள்)